# குளச்சல் நகராட்சி

## 2016–2017–ம் ஆண்டிற்கான நிர்வாக அறிக்கை

### 1. அமைப்பும் மேலாண்மையும்

1. ஆட்சி அமைப்பு (Jurisdiction)

குளச்சல் நகராட்சி திருவிதாங்கூர் கொச்சி மாகாணத்தில் இருந்த போது 1920–ம் ஆண்டு மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டது. அரசாணை நிலை எண்.85 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 22.8.1998–ன்படி இரண்டாம் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டுள்ளது. பின்னர் அரசாணை நிலை எண்.238 (நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை) நாள் 02.12.2008–ன்படி முதல் நிலை நகராட்சியாக உயர்த்தப்பட்டு,24 வார்டுகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. இதன் மொத்த பரப்பளவு **5.18** சதுர கி.மீ. இந்நகரின் மக்கள் தொகை **2011** ம் வருட கணக்கீட்டின்படி**23155** ஆகும்.

முதல்நிலை நகராட்சியில் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் விவரம் நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடிதம் ந.க.எண். 3141/2007/OP நாள் 07.10.2008–ன்படி தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இந்நகராட்சி பொதுப் பிரிவில் பணியமர்த்தப்பட வேண்டிய பணியாளர்கள் விவரம் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

| பணியிடங்கள் விவரம் | | அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | நிரப்பப்பட வேண்டிய புதிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | வருவாய் அலுவலர் வகுப்பு – IV | 1 | – | 1 |
| 2 | கணக்கர் (வகுப்பு – IV ) | 1 | – | 1 |
| 3 | உதவி கணக்கர் (வகுப்பு – V ) | 1 | – | 1 |
| 4 | உதவியாளர் (வகுப்பு – IV ) | 2 | – | 2 |
| 5 | இளநிலை உதவியாளர் (வகுப்பு – VII ) | 8 | 3 | 5 |
| 6 | காசாளர் (வகுப்பு – VII ) | 1 | – | 1 |
| 7 | தட்டச்சர் (வகுப்பு – VII ) | 2 | 1 | 1 |
| 8 | வருவாய் ஆய்வாளர் (வகுப்பு – V ) | 1 | – | 1 |
| 9 | வருவாய் உதவியாளர் (வகுப்பு – VII ) | 4 | 3 | 1 |
| 10 | பொருள் காப்பாளர் (வகுப்பு – ஏ ) (Store Keeper) | 1 | – | 1 |
| 11 | ஆவண எழுத்தர் | 1 | – | 1 |
| 12 | அலுவலக உதவியாளர் | 7 | 1 | 6 |
| 13 | உதவி திட்ட அமைப்பாளர் (கணனி) | 1 | 1 | 0 |
| 14 | புள்ளி விவர குறிப்பாளர் | 2 | 0 | 2 |
| 15 | அலுவலக இரவு காவலர் | 1 | – | 1 |
| 16 | ஓட்டுநர் | 6 | 3 | 3 |

**பொறியாளர் பிரிவில் நிரப்பப்பட வேண்டிய பணியிடங்கள்**

| பணியிடங்கள் விவரம் | | அரசாணையின்படி தோற்றுவிக்கப்பட வேண்டிய பணியிடங்கள் | தற்போது அனுமதிக்கப்பட்ட பணியிடங்கள் | நிரப்பப்பட வேண்டிய புதிய பணியிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 1 | பொறியாளர் நிலை – 2 | 1 | நகராட்சிபொறியாளர் நிலை 3 | நிலையினை உயர்த்தப்பட வேண்டும். 1 |
| 2 | உ.பொ / இ.நி.பொ. | 2 | – | 2 |
| 3 | பணி ஆய்வர் | 3 | – | 3 |
| 4 | குழாய் ஆய்வர் | 2 | – | 2 |
| 5 | மின்பணியாளர் நிலை–2 | 2 | 1 | 1 |
| 6 | துலக்குநர் | 5 | – | 5 |
| 7 | மீட்டர் ரீடர் | 2 | – | 2 |
| 8 | குழாய் பொருத்துநர் நிலை– 2 | 2 | – | 2 |
| 9 | குழாய் திறப்பாளர் | 2 | – | 2 |
| 10 | மேல்நிலை நீர்தேக்க தொட்டி காவலர் | 5 | – | 5 |
| 11 | மின்கம்பியாளர் | 2 | 1 | 1 |
| 12 | மின்கம்பி உதவியாளர் | 2 | 1 | 1 |

குளச்சல் நகராட்சியின் பரப்பளவு 5.18 சதுர கி.மீ. 2001–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23787 ஆகும். இதில் ஆண்கள் 11996, பெண்கள் 11791. மொத்த மக்கள் தொகையில் எஸ்.சி./எஸ்.டி. வகுப்பினர் எண்ணிக்கை 602 (ஆண்கள் 293, பெண்கள் 309) 2011–ம் ஆண்டு மக்கள் தொகை கணக்கெடுப்பின்படி இந்நகராட்சியின் மக்கள் தொகை 23155 ஆகும். இதில் ஆண்கள் 11770, பெண்கள் 11385.

## 2. பணி அமைப்பு (Personel)

### அ. மன்றம்

இந்நகராட்சியில் உள்ள மொத்த வார்டுகளின் எண்ணிக்கை 24 ஆகும். இதில் பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ள 8 வார்டுகளில் 1 வார்டு எஸ்.சி. பெண்களுக்காக ஒதுக்கப்பட்டுள்ளது. 16 வார்டுகள் பொதுவானவையாகும்.

| | |
|---|---|
| பொது | வார்டு எண். 3, 4, 5, 7, 8, 9, 10, 11, 12, 14, 15, 17, 18, 20, 21, 22 |
| பெண்கள் (பொது) | வார்டு எண். 1, 2, 6, 13, 16, 19, 24 |
| பெண்கள் (S.C.) | வார்டு எண். 23 |

01.04.2016 முதல் 25.10.2016 முடிய மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நகர்மன்றம் செயல்பட்டு வந்தது. திரு.அ.நசீர் அவர்கள் நகர்மன்றத் தலைவராக இருந்து வருகிறார். நகர்மன்ற துணைத் தலைவராக இருந்து வந்த திரு.அ.ஜேசுராஜன் அவர்கள் காலமாகி விட்டபடியால் புதிய துணைத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்ட திரு.நா.முகம்மது தாசிம் 22.01.2015–ம் தேதியிலிருந்து 25.10.2016 முடிய தொடர்ந்து பதவி வகித்து வகித்துள்ளனர். மொத்தம் 23 நகர்மன்ற உறுப்பினர்களும் 25.10.2016 வரை பதவி வகித்துள்ளனர்.

| வார்டு எண். | நகர்மன்ற உறுப்பினர் பெயர் |
|---|---|
| | திரு. நசீர் .அ. நகர்மன்ற தலைவர் |
| 3 | திரு.நா.முகம்மது தாசிம், நகர்மன்ற துணைத்தலைவர் |
| நகர்மன்ற உறுப்பினர்கள் | |
| 1 | திருமதி.விஜயராணி .றே |
| 2 | திருமதி.லதா.அ.தி |
| 3 | திரு.முகம்மது தாசிம் .நா |
| 4 | திரு.இப்ராஹீம்.அ |
| 5 | காலியிடம் |
| 6 | திருமதி. அமலபுஷ்பம். பி |
| 7 | திரு.பென்சிகர் .கி |
| 8 | திரு.குருசையா.சூ |
| 9 | திரு.பிரான்சிஸ் அமலதாஸ்.ஏ |
| 10 | திரு.ஜெஸ்டின்ராஜ் .கி |
| 11 | திரு.ஆன்றனி ராஜன்.லி |
| 12 | திரு.லாரன்ஸ் .பி |
| 13 | திருமதி. ஜான்சி .தோ |
| 14 | திரு.சூசைமரியான்.சி |
| 15 | திருமதி.சிலுவைமேரி.லே |
| 16 | திருமதி.ஷெர்லி பிளாரன்ஸ் .ச |
| 17 | திரு.முருகன்.சொ |
| 18 | திரு.சாதிக் .அ |
| 19 | திருமதி.கோமளா .அ |
| 20 | திரு.அப்துல் ரஹீம் .மு |
| 21 | திரு.நூறுமுகம்மது .மு. |
| 22 | திரு.சாகுல் ஹமீது .மு |
| 23 | திருமதி. லதா. கு |
| 24 | திருமதி. சாந்தி. ஜெ. |

26.10.2016 முதல் நகராட்சி ஆணையர்கள் தனி அலுவலராக நியமிக்கப்பட்டு செயல்பட்டு வருகிறார்கள்.

## ஆணையாளர்

அறிக்கைக்குட்பட்ட காலத்தில் 01.04.2016 முதல் 25.08.2016 வரை திரு.அ.வெங்கடாசலம், நகராட்சி பொறியாளர் நகராட்சி ஆணையாளராக பொறுப்பாற்றி உள்ளார். திருமதி.ரா.கீதா நகரமைப்பு ஆய்வாளர், ஆணையாளர் பொறுப்பாக 26.08.2017 முதல் 06.03.2017 வரை பணியாற்றி உள்ளார். 07.03.2017 முதல் 21.05.2017 வரை திரு.ஆ.தாணுமூர்த்தி நகராட்சி ஆணையாளராக பணியாற்றி உள்ளார்.

## 3. தேர்தல்

சென்னை உயர்நீதி மன்ற உத்தரவின் படி,நடப்பு ஆண்டில் உள்ளாட்சி தேர்தல் ஏதும் நடைபெறவில்லை. ஆதலால் 26.10.2016 முதல் தனி அலுவலர் தலைமையில் நகர்மன்றக் கூட்டம் நடைபெற்று வந்தது. நகராட்சி ஆணையர்கள் தனி அலுவலராக பதவி வகித்து வந்தனர்.

## 4. நகர்மன்றக் கூட்டங்கள்

அறிக்கையாண்டில் நகர்மன்றக்கூட்டங்கள் முறையாகவும், சீராகவும் நடைபெற்றுள்ளது. அறிக்கையாண்டில் நடைபெற்றுள்ள கூட்டங்கள் மற்றும் முடிவு செய்யப்பட்டுள்ள பொருள்கள் விவரங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

| கூட்டத்தின் தன்மை | நடைபெற்ற கூட்டங்களின் எண்ணிக்கை | முடிவு செய்யப்பட்ட பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| சாதாரணக்கூட்டம் | 97 | 238 |
| அவசரக்கூட்டம் | 57 | 54 |
| சிறப்புக்கூட்டம் | 1 | 1 |

## 5. குழுக்கள்

01.04.2016 முதல் 25.10.2016 முடிய வரிமேல் முறையீட்டுக்குழு, நியமனக்குழு மற்றும் ஒப்பந்தக் குழுக்களால் அறிக்கையாண்டில் முடிவுகள் எதுவும் எடுக்கப்பட வில்லை.

திருமதி.அ.தி.லதா அவர்கள் நியமனக்குழு உறுப்பினராகவும், திருமதி.தே.விஜயராணி அவர்கள் ஒப்பந்தக்குழு உறுப்பினராகவும், மற்றும் திருமதி.அ.கோமளா, திரு.அ.சாதிக், திருமதி.ஜெ.சாந்தி, திரு.சி.சூசைமரியான் ஆகியோர்கள் வரி மேல்முறையீட்டுக்குழு உறுப்பினர்களாக 25.10.2016 வரை பதவி வகித்து வந்துள்ளனர்.

## 6. நிர்வாகம் (பொதுப்பிரிவு)

**பொதுப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ள பணியிடங்கள் விவரம் கீழ்வருமாறு :**

| | | |
|---|---|---|
| 1 | மேலாளர் | 1 |
| 2 | இளநிலை உதவியாளர் | 3 |
| 3 | தட்டச்சர் | 1 |
| 4 | அலுவலக உதவியாளர் | 1 |
| 5 | புள்ளிவிவர குறிப்பாளர் | 1 |
| 6 | வருவாய் உதவியாளர்கள் | 3 |

அறிக்கையாண்டில் பணியாளர்களின் ஊதியமாக ரூ.26,84,592/— செலவிடப்பட்டுள்ளது.

## ஆ. பொறியியல் பிரிவு

**பணியாளர்கள் விவரம்**

இந்நகராட்சியின் பொறியியல் பிரிவில் கீழ்க்கண்ட பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

| | | |
|---|---|---|
| 1 | நகராட்சி பொறியாளர் நிலை–III | 1 |
| 2 | பொதுப்பணி மேற்பார்வையாளர் | 1 |
| 3 | மின்பணியாளர் நிலை –II | 1 |

அறிக்கை ஆண்டில் பணியாளர்கள் செலவினம் ரூ. 15,45,108/–ஆகும்.

**சாலைகள், பாலங்கள் மற்றும் தோணி துறைகள்**

இந்நகராட்சிப் பகுதிக்குள் தேசிய நெடுஞ்சாலை எதுவும் இல்லை. இந்நகராட்சி எல்கைக்குட்பட்ட சாலைகளின் மொத்த நீளம் 38.68 கி.மீ. இந்நகராட்சி எல்கைக்குள் நெடுஞ்சாலை மற்றும் ஊரகப்பணித் துறையினரால் பராமரிக்கப்படும் சாலைகளின் மொத்த நீளம் 17.582 கி.மீ. சாலை பராமரிப்புக்கென தனியாக பணியாளர் யாரும் இல்லை. பொது சுகாதாரப் பணியாளர்களைக் கொண்டு பராமரிப்புப் பணி நடைபெற்று வருகின்றன.

| **வ.எண்.** | **சாலையின் விவரம்** | **31.3.2016–ன்படி** |
|---|---|---|
| 1. | சிமெண்ட் சாலை | 22.60 கி.மீ. |
| 2. | கருந்தள சாலை | 5.00 கி.மீ. |
| 3. | பேவர் பிளாக் சாலை | 5.58 கி.மீ. |
| 4. | மண் சாலை | 1.80 கி.மீ |
| 5 | பிளாஸ்டிக் சாலை | 3.70 கி.மீ. |
| | **மொத்தம்** | **38.68 கி.மீ.** |

**(இ) தெருவிளக்கு**

தெருவிளக்கு பராமரிப்பில் கீழ்கண்ட பணியாளர்கள் தொடர்ந்து பணிபுரிந்து வருகின்றனர்.

| | | |
|---|---|---|
| 1 | மின் கம்பியாளர் | 1 |
| 2 | மின்கம்பி உதவியாளர் | 1 |

இத்தலைப்பின்கீழ் அறிக்கை ஆண்டில் பணியாளர் செலவினம் ரூ11,16,948/– மின்விளக்கு உபகரணங்கள் வாங்க ரூ.6,25,020/– செலவு செய்யப்பட்டுள்ளது. மின்கட்டணமாக ரூ.36,84,218/– தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு செலுத்தப்பட்டுள்ளது. அறிக்கையாண்டின் இறுதியில் கீழ்கண்டவாறு தெருவிளக்குகள் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

| வ. எண் | விளக்குகள் விவரம் | 1.4.2015–ல் உள்ளபடி | நீக்கம் | சேர்க்கை | 31.3.2016–ல் உள்ளபடி |
|---|---|---|---|---|---|
| 1 | உயர்கோபுர மின் விளக்கு | 1 | – | – | 1 |
| 2 | சிறிய உயர்கோபுர மின் விளக்கு | 4 | – | – | 4 |
| 2 | சோடியம் ஆவிவிளக்கு | 32 | – | – | 37 |
| 3 | 40 வால்ட் குழல் விளக்கு | 1236 | – | – | 1268 |
| 4 | CFL விளக்கு | 185 | – | – | 185 |
| 5 | LED விளக்கு | 70 | – | – | 90 |

அ) இந்நகராட்சிப் பகுதியில் பெரிய பாலங்கள் எதுவுமில்லை.

ஆ) அறிக்கை ஆண்டில் பெரிய பாலங்கள் எதுவும் கட்டப்படவில்லை

Ï) தங்கும் விடுதிகள், சத்திரங்கள் மற்றும் தண்ணீர் பந்தல்கள்

இந்நகராட்சியில் மேற்காணும் யாவும் பராமரிக்கப்படவில்லை. பொதுப்பணித் துறையினரால்
பயணிகள் விடுதி மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றது

10. <u>தளவாடச் சாமான்கள்</u>

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சியில் தளவாடச் சாமான்கள் வாங்குவதற்காகான செலவு ரூ.1,77,046/– மேற்கொள்ளப்பட்டது.

11. <u>தெருவிளக்குகள்</u>

இந்நகராட்சி பகுதியிலுள்ள தெருவிளக்குகள் அனைத்தும் நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகின்றன.

## III. கல்வி

12. <u>கல்வி வரி</u>

நகராட்சி எல்கைக்குள் தனியாரால் 7 பள்ளிகளும், அரசினரால் 6 பள்ளிகளும் பராமரிக்கப்பட்டு
வருகின்றன. இந்நகராட்சியின் பராமரிப்பில் பள்ளிக் கட்டிடம் எதுவும் இல்லையாதலால் கல்வி
வரி வசூலிக்கவில்லை.

13. மாணவர்கள் எண்ணிக்கையும் திறமையும் – கேள்வி எழவில்லை

14. பயிற்றுவிக்கும் பணியாளர்கள் – கேள்வி எழவில்லை

15. இடவசதியும் சாதனங்களும் – கேள்வி எழவில்லை

16. (1) ஆரம்பப்பள்ளி – கேள்வி எழவில்லை

(2) இடைநிலைக் கல்வி – கேள்வி எழவில்லை

17. <u>பள்ளிகளின் எண்ணிக்கையும் வசதிகளும்</u>

இந்நகராட்சியின் பராமரிப்பில் மேல்நிலைப் பள்ளிகளோ, உயர்நிலைப் பள்ளிகளோ எதுவும் இல்லை.
தனியாரால் 2 மேல்நிலைப் பள்ளிகளும், அரசால் 1 உயர்நிலைப் பள்ளியும் நிர்வகிக்கப்பட்டு வருகின்றன.

18. கல்வித் திறமை கேள்வி எழவில்லை

19. பணியாளர்கள் கேள்வி எழவில்லை

20. இடவசதிகள் கேள்வி எழவில்லை

21. நிதி ஆதாரம் கேள்வி எழவில்லை

**22. சிறப்புப் பள்ளிகள்**

நகராட்சியால் சிறப்புப் பள்ளி அல்லது வாசக சாலை எதுவும் பராமரிக்கப்படவில்லை. மாவட்ட
நூலக ஆணைக் குழுவினரால் ஒரு பொது நூலகம் மட்டும் பராமரிக்கப்பட்டு வருகின்றன.
தனியாரால் தனிப் பயிற்சி கல்லூரிகளும் **(Tutorial College)** குழந்தைகளுக்கு
ஒரு கான்வென்ட் பள்ளியும் ஒரு அராபிக் கல்லூரியும் நடத்தப்பட்டு வருகின்றன.

**வானொலிப்பெட்டி மற்றும் தொலைக்காட்சிப் பெட்டிகள்**

வானொலிப் பெட்டி மற்றும் தொலைக்காட்சி பெட்டிகள் எதுவும் பராமரிக்கப்படவில்லை.

**புரட்சித்தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்டம்**

இந்நகராட்சியில் கீழ்கண்ட 11 இடங்களில் குழந்தைகள் நல மையங்கள் இயங்கி வருகின்றன.

| | |
|---|---|
| 1 | சாஸ்தாங்கரை |
| 2 | செக்காலத்தெரு |
| 3 | அஞ்சாலிவிளை |
| 4 | களிமார் |
| 5 | கொட்டில்பாடு–1 |
| 6 | கொட்டில்பாடு–2 |
| 7 | மரமடி–1 |
| 8 | மரமடி–2 |
| 9 | துறைமுகத்தெரு–1 |
| 10 | துறைமுகத்தெரு–2 |
| 11 | துறைமுகத்தெரு–3 |

அறிக்கையாண்டில் 11 குழந்தைகள் நல மையங்கள் நகராட்சி சொந்த கட்டிடங்களில் இயங்கி
வருகின்றன.

**14) பள்ளி சத்துணவு மையங்கள்**

பள்ளி சத்துணவு மையங்கள் எதுவும் நகராட்சி கட்டுப்பாட்டில் இல்லை.

## 1. பொது சுகாதாரம்

### i) மருத்துவ நிவாரணம்

இந்நகராட்சியில் மருத்துவமனைகள் அல்லது மருந்தகங்கள் எதுவும் பராமரிக்கப்படவில்லை. ஒரு அரசு மருத்துவமனையும், ஒரு ஆரம்ப சுகாதார நிலையமும், 10 தனியார் மருத்துவமனைகளும் நகரில் செயல்பட்டு வருகின்றன.

### ii) அமைப்பும் பணியாளர்களும்

இந்நகராட்சியில் நகர்நல அலுவலர் பணியிடம் இல்லை.

iii) சிறப்புத்திட்டம் – எதுவுமில்லை.

(1) மருத்துவப் பயிற்சிக்கு உதவித் தொகை வழங்கல் – எதுவுமில்லை.

24) நோயாளிகள் – கேள்வி எழவில்லை

25) வசதிகள் – கேள்வி எழவில்லை

### 26) பொதுசுகாதாரப் பணியாளர்கள் விவரம்

பொது சுகாதாரப் பிரிவில் கீழ்கண்ட பணியிடங்கள் அரசினால் அனுமதிக்கப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| 1 | துப்புரவு அலுவலர் | காலியிடம் 1 |
| 2 | துப்புரவு ஆய்வாளர் | 1 |
| 3 | துப்புரவு மேற்பார்வையாளர் | 4 |
| 4 | துப்புரவு பணியாளர்கள் | 50 ( காலியிடம் –9) |
| 5 | மகப்பேறு உதவியாளர் | 1 |
| 6 | மகப்பேறு ஆயா | 1 |
| 7 | ஓட்டுநர்கள் | 3 |

அறிக்கையாண்டில் பொது சுகாதாரப் பிரிவில் பணியாளர்கள் ஊதியம் மற்றும் இதர செலவினம் ரூ. 1,55,01,456 /– ஆகும்.

### 27) மகப்பேறு நிவாரணம்

இந்நகராட்சியில் மகப்பேறு உதவியாளர் ஒருவரும், ஒரு மகப்பேறு ஆயாவும் பணிபுரிந்து வருகிறார்கள்.

### 28) பிறப்பு இறப்பு விவரம் 2015–16

| | |
|---|---|
| இறப்புகளின் எண்ணிக்கை | 165 |
| பிறப்புகளின் எண்ணிக்கை | 555 |
| இறந்து பிறந்தவை | – |
| சிசு மரணம் | – |
| பேறுகால இறப்பு | – |

**2015–16–ல் தடுப்பு மருந்து போட்ட விவரம்**

| மருந்து | தடுப்பு மருந்து போட்ட குழந்தைகள் |
|---|---|
| Hepatits – B | 216 |
| T.T. | 220 |
| D.P.T. | 208 |
| Polio | 864 |
| B.C.G. | 216 |

| | |
|---|---|
| Measles | 210 |
| Penta | 210 |

29. <u>சுகாதாரம்</u>

துப்புரவுப் பணிக்கு 1 காம்பாக்டர் லாரி, 2 மினி ஆட்டோ, 1 மினி லாரி தற்சமயம் பயன்படுத்தப்பட்டு வருகின்றன.

<u>அ) நகர் சுகாதாரம்</u>

இந்நகரில் மொத்தம் 7017 கட்டிடங்கள் உள்ளன. அனைத்து வீடுகளில் கழிப்பிட வசதி உள்ளன. இந்நகராட்சி பகுதியில் சேகரமாகும் குப்பைகளை உப்பளம் பகுதியில் அமைந்துள்ள நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது.

ஆ) உணவு கலப்பட தடுப்புச் சட்டம்

அறிக்கையாண்டில் திரு.முருகேசன், துப்புரவு ஆய்வாளர் அவர்களால் உணவு கலப்படத் தடுப்பு சட்டத்தின்கீழ் உணவு மாதிரிகள் எடுக்கப்பட்டது.

இ) அபாயகரமானதும் அருவருக்கத்தக்கதுமான உரிமத்தின்கீழ் பெறப்பட்ட வருமானம் – D&O – ரூ. 1,25,100 ,/–

ஈ) நகராட்சிப் பகுதியில் அரசினால் பிரகடனப்படுத்தப்பட்ட உள்ளாட்சி தினவிழா, அறிஞர் அண்ணா பிறந்த தினவிழா, தமிழர் திருநாள் ஆகிய விழாக்கள் சிறப்பாக கொண்டாடப்பட்டு வருகிறது.

30) பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம்

இந்நகராட்சிப் பகுதியில் வெள்ளிப்பிள்ளையார் கோவில் தெரு பகுதியில் அமைந்துள்ள 21 ஆழ்குழாய் கிணறுகளிலிருந்து கீழ்கண்ட இடங்களில் அமைந்துள்ள மேல்நிலைத் தொட்டிகளுக்கு மின்சார மோட்டார் மூலம் தண்ணீர் ஏற்றப்பட்டு கிருமி நாசினி கலந்து நகரில் எல்லா பகுதிகளுக்கும் பாதுகாக்கப்பட்ட குடிநீர் வினியோகம் செய்யப்பட்டு வருகின்றது. 21 ஆழ்குழாய் கிணறுகளில் 20 ஆழ்குழாய் கிணறுகளில் 10 H,P. மோட்டார்களும், 1 ஆழ்துளைக்கிணற்றில் 5 H,P. மோட்டாரும் பொருத்தப்பட்டுள்ளன.

**மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் விவரம்**

| வ.எண். | அமைந்துள்ள இடம் | கொள்ளளவு |
|---|---|---|
| 1 | பேருந்து நிலையம் | 3 லட்சம் |
| 2 | துறைமுகத்தெரு | 2 லட்சம் |
| 3 | பொட்டல் பகுதி | 2 லட்சம் |
| 4 | நகராட்சி அலுவலகம் | 7 லட்சம் |
| 5 | துறைமுகத்தெரு | 1 லட்சம் |
| 6 | பர்னட்டிவிளை | 0.60 லட்சம் |
| 7 | கொட்டில்பாடு | 0.30 லட்சம் |
| 8 | கே.எஸ்.எஸ்.எஸ்.காலனி | 0.60 லட்சம் |
| 9 | சிங்காரவேலன் காலனி | 0.30 லட்சம் |
| 10 | மாதாகாலனி | 3.00 லட்சம் |
| 11 | KSSS காலனி – 2 | 3.00 லட்சம் |

இந்நகராட்சியில் 148 பொதுக்குழாய்கள் உள்ளன. 4448 தனியார், வீட்டு குடிநீர் குழாய்கள் நகராட்சி மூலம் வழங்கப்பட்டு பாதுகாக்கப்பட்ட குடிநீர் தினந்தோறும் விநியோகிக்கப்பட்டு வருகிறது.

குடிநீர் கட்டணம்

அறிக்கை ஆண்டில் 2016–2017– குடிநீர் கணக்கு தலைப்பின்கீழ் வரவு ரூ. 79.54 லட்சம், செலவு ரூ.82.08 லட்சம், கூடுதல் செலவினம் ஆரம்ப நிதியில் இருந்து செலவு செய்யப்பட்டுள்ளது.

31) கழிவுநீர் வடிகால்

இந்நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டம் எதுவும் இல்லை. மழைநீர் வடிகால் மூலம் கழிவுநீர் நகரின் மேற்கே பாம்பூரி வாய்க்காலில் கடலில் சேருமிடத்தில் கலக்கிறது. நகரில் உள்ள மழைநீர் வடிகால் நீளம் 27.05 கி. மீ.

32) பொது நலமும் பாதுகாப்பும்

அறிக்கையாண்டில் நாய்கள், பன்றிகள் எதுவும் அழிக்கப்படவில்லை,

33) பொது – இல்லை

34) போக்குவரத்து – இல்லை

(அ) தினசரிச் சந்தை, மீன் சந்தை, வதை சாலை, பேரூந்து நிலையம் மற்றும் கட்டண கழிப்பிடம்
போன்றவைகள் மூலம் கிடைத்த வருமான விவரம் பின்வருமாறு.

| தினசரிச்சந்தை | மீன்சந்தை | வதைசாலை | பேரூந்து நிலைய கட்டணம் | கட்டண கழிப்பிடம் |
|---|---|---|---|---|
| 726670/– | 120750/– | –– | 295264/– | 111300/– |

(ஆ) தினசரிச் சந்தை ஒன்றும், மீன்சந்தை ஒன்றும், பேருந்து நிலையம் 1 –ம் கட்டணக் கழிப்பிடம்
1–ம் பேணப்பட்டு பொது ஏலத்தில் குத்தகைக்கு விடப்பட்டு வருகின்றன.

(இ) வண்டிப்பேட்டை – இல்லை

(எ) பேரூந்து நிலையம்

சி – பிரிவு பேருந்து நிலையம் ஒன்று பராமரிக்கப்பட்டு வருகின்றது. பேருந்து நிலையம் மூலம்
அறிக்கையாண்டில் நகராட்சிக்கு ரூ. 295264/– வருமானம் கிடைத்துள்ளது.

(உ) வதை சாலை

நகராட்சிக்கு சொந்தமான வதை சாலை – இல்லை.

(ஊ) தொழில் கூடங்கள்

G.O.Ms.No.192 HSUD Dept. நாள் 14.02.1991 –ன்படி உள்ள மாஸ்டர் பிளான் அமுலில் உள்ளது. 1939–ம் வருட தமிழ்நாடு பொது சுகாதாரச் சட்டம் 01.07.1966 முதல் இந்நகராட்சியில் அமுலில் உள்ளது.

35) மரம் நடுதல் மற்றும் பூங்கா பராமரிப்பு

அறிக்கையாண்டில் மரங்கள் எதுவும் நடப்படவில்லை.

நகராட்சிக்கு சொந்தமான துறைமுகப் பகுதி போர் வெற்றிச்சின்னம் அருகில், கொட்டில்பாடு
மற்றும் மரமடி குருசடி அருகில் பூங்காக்கள் அமைக்கப்பட்டு இந்நகராட்சியால் பராமரிக்கப்பட்டு வருகிறது.

36) <u>நில வளர்ச்சி</u>

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர், திருநெல்வேலி அவர்களால் பரிந்துரைக்கப்பட்ட விரிவு
அபிவிருத்தித்திட்டம்–I, II மற்றும் III ஆகியவை விளம்பரப்படுத்தப்பட உள்ளது.

(ஆ) <u>நகரமைப்பு திட்டங்கள்</u>

நகரமைப்புத் திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றது.

(இ) <u>சாலை ஓரக்கடைகள்</u> – இல்லை

(ஈ) வரை கடப்புகள் – அறிக்கையாண்டின் தொடக்கத்தில் 26 வரை கடப்புகள் காணப்பட்டன.

(உ) இதர வருவாய் வரத்தக்க இனங்கள் – இதர இனங்கள் எதுவுமில்லை.

<u>பொது வருமானம்</u>

38) வருவாய் இனம்

இந்நகராட்சியில் கீழ்கண்டவாறு சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது,

| | விவரம் | வரி |
|---|---|---|
| 1 | பொது வரியினங்கள் | 8% |
| 2 | விளக்கு வரி | 8% |
| 3 | தண்ணீர் வரி | 8% |

சொத்துவரி

| மண்டலம் | A முக்கிய சாலைகள் | 2.05 பைசா |
|---|---|---|
| | B பிரதானசந்திப்பு சாலைகள் | 1.05 பைசா |
| | C குடியிருப்பு பகுதிகள் | 0.75 பைசா |
| | D குடிசைப்பகுதி | 0.50 பைசா |

38) கட்டிடங்களுக்கு வரிவிதிப்பு

அறிக்கையாண்டில் 188 கட்டிடங்களுக்கு புதிய வரிவிதிப்பு செய்யப்பட்டுள்ளது. புதிய வரிவிதிப்புகள் மூலம் நகராட்சி வருமானம் ரூ. 1,75,500/–

39) <u>கேட்பு வசூல் நிலுவை</u>

அறிக்கையாண்டில் வரியினம் மற்றும் வரியற்ற இனத்தின்கீழ் கேட்பு வசூல் நிலுவை விவரம்

கீழே கொடுக்கப்பட்டுள்ளது.

| இனம் | கேட்பு 2016–17 | வசூல் | நிலுவை (ரூ.இலட்சத்தில்) | வசூல் விழுக்காடு |
|---|---|---|---|---|
| சொத்துவரி | 125.80 | 74.70 | 51.10 | 59% |
| தொழில்வரி | 19.78 | 14.66 | 5.12 | 74% |
| தண்ணீர் கட்டணம் | 40.95 | 31.39 | 9.57 | 77% |
| வரியற்றயினம் | 33.69 | 21.80 | 11.90 | 65% |

நூலகவரி சொத்துவரியில் 10 % என்ற கணக்கில் வசூலிக்கப்பட்டு வருகின்றது. தொழில் வரி புதிய அரசாணைப்படியும், இந்நகர்மன்ற தீர்மானம் எண்.826 நாள் 30.01.2014–ன்படியும் கீழ்க்கண்ட விபரப்படி தொழில்வரி நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| ரூ. 21,000/– வரை | இல்லை |
| ரூ. 21,001 முதல் ரூ. 30,000 வரை | ரூ. 118/– |
| ரூ.31,001 முதல் ரூ. 45,000 வரை | ரூ. 294/– |
| ரூ.45,001 முதல் ரூ. 60,000 வரை | ரூ. 586/– |
| ரூ.60,001 முதல் ரூ. 75,000 வரை | ரூ. 880/– |
| **ரூ.75,001 முதல் அதற்கு மேல்** | **ரூ.1173/–** |

**40) கடைகளின் மூலம் கிடைத்த வருமானம்**

இந்நகராட்சிக்கு கீழ்க்காணும் இடங்களில் கட்டப்பட்டுள்ள கடைகளின் மூலம் ரூ.2164359/–வருமானம் கிடைத்துள்ளது.

| **வ.எண்** | **கடைகள் அமைந்துள்ள இடம்** | **கடைகளின் எண்ணிக்கை** | **மொத்த வருமானம்** |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலையக் கடைகள் | 41 | 6,21,453 |
| 2 | கவியரசு கண்ணதாசன் வணிக வளாகக் கடைகள் | 64 | 7,21,454 |
| 3 | கலைஞர் கருணாநிதி வணிக வளாகக் கடைகள் | 32 | 8,21,452 |

41) <u>பொது</u>

இந்நகராட்சியின் பொது நிதி உட்பட பல்வேறு தலைப்புகளின்கீழ் நடைபெற்ற பணிகள் விவரம் 2015–2016–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட பணிகள்

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீட்டு தொகை (ரூபாய்) |
|---|---|---|
| **I** | பொதுநிதி – 2016–17 | |
| 1 | இந்நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17, கனியாகுடி முதல் பள்ளிவிளாக சாலை வரை மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல் | 3,50,000/– |

| | | |
|---|---|---|
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு முதல் ஏ.வி.எம் கால்வாயில் அடைப்புகளை அகற்றுதல் | 25,000/– |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட துறைமுகத் தெருவில் போர் வெற்றித்தூண் அமைந்துள்ள பகுதியில் வர்ணம் பூசுதல் பணி | 48,000/– |
| **4** | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.15–ல் கதவு எண்.18/4–ல் அருகில் பெட்ரோல் பங்க் எதிர்புறம் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை அமைத்தல் | 1,70,000/– |
| **5** | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட உப்பளம் பகுதியில் உரக்கிடங்கில் குப்பைகளை அகற்றுதல் | 1,50,000/– |
| **6** | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட பகுதியில் காம்பாக்டர் குப்பைத் தொட்டிகளில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 1,50,000/– |
| 7 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட உப்பளம் பகுதியில் உரக்கிடங்கு குப்பைகளை அகற்றுதல் | 1,20,000/– |
| 8 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.14–ல் துறைமுகத் தெரு முதல் பொழிமுகம் வரை வடிகால் ஓடை கட்டுதல் | 1,50,000/– |
| 9 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.2 பர்ணட்டிவிளையில் வடிகால் பராமரிப்பு பணிகள் மற்றும் மேல்மூடி அமைத்தல் | 1,50,000/– |
| 10 | குளச்சல் நகராட்சி அலுவலக கட்டிடங்களில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 3,30,000/– |
| 11 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.8–ல் மரமடி பகுதியில் கதவு எண்.10/2–ன் அருகில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை கட்டுதல் | 90,000/– |
| 12 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.10–ல் மரமடி பகுதியில் கதவு எண்.10–103/11–70 –ன் அருகில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை கட்டுதல். | 50,000/– |
| 13 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.9–ல் மரமடி பகுதியில் மின் கம்பம் எண்.24–ன் அருகில் வடிகால் ஓடை கட்டுதல் | 92,000/– |
| 14 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில் பாடு முதல் துறைமுகத்தெரு வரை ஏ.வி.எம் கால்வாயில் அடைப்புகளை அகற்றுதல் | 40,000/– |
| 15 | இந்நகராட்சி புதிய மீன் சந்தையில் 250 KVA ஜெனரேட்டர் நிறுவுதல் மற்றும் மேற்கூரை அமைத்தல் | 3,80,000/– |
| 16 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.11–ல் மரமடி பகுதியில் கதவு எண்.12/39–ன் அருகில் மூடியுடன் கூடிய வடிகால் ஓடை கட்டுதல் | 90,000/– |
| 17 | குளச்சல் நகராட்சி காமராஜர் பேருந்து நிலையத்தில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல் | 51,000/– |
| **II** | **குடிநீர் நிதி– 2016–17** | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2016–17–ம் ஆண்டு குடிநீர் இணைப்பு வழங்குவதற்கு சேதப்படுத்தப்பட்ட சாலைகள் வடிகால் மற்றும் குடிநீர் வால்வு பிட்டுகள் பராமரிப்பு பணிள் மேற்கொள்ளுதல் | 3,50,000/– |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் வினியோகத்திற்கு தேவையான 10HP நீர் மூழ்கி மின் மோட்டார் மற்றும் பேனல் போர்டு வாங்குதல் | 2,62,000/– |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட குடிநீர் வினியோக பணிக்கு தேவையான 4 தினக்கூலி பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் பணிக்கு அமர்த்துதல் | 1,20,000/– |
| 4 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2016–17–ம் ஆண்டு குடிநீர் வினியோக வருடாந்திர பராமரிப்பு பணிகள் | 7,00000 |

| | | |
|---|---|---|
| III | தூய்மை இந்தியா திட்டம் | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சி.எம்.சி காலனியில் சமுதாய கழிவறை கட்டுதல் | 5,50,000/— |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட கொட்டில்பாடு பகுதியில் சமுதாய கழிவறை கட்டுதல் | 5,50,000/— |
| IV | EPRD | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட உப்பளம் பகுதியில் பிளாஸ்டிக் உடைப்பு இயந்திரத்துடன் கூடிய சேகரிப்பு நிலையம் கட்டுதல் | 14,25000/— |
| V | சட்டமன்ற தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | |
| 1 | குளச்சல் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மைக்கு தேவையான குப்பை தொட்டிகள் வாங்குதல் | 2,50,000/— |
| VI | பாராளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட அஞ்சாலி அம்மன் தெருவில் சிறிய உயர்கோபுர மின் விளக்கு அமைத்தல் | 2,00,000/— |
| 2 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட சன்னதி தெருவில் சிறிய உயர்கோபுர மின் விளக்கு அமைத்தல் | 2,00,000/— |
| 3 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண்.17—ல் களிமார் மகா விஷ்ணு கோவில் அருகில் படிப்பகம் கட்டுதல் | 5,00,000/— |
| VII | தெருவிளக்கு பணிகள் | |
| 1 | குளச்சல் நகராட்சிக்குட்பட்ட 2016—17—ம் ஆண்டு தெருவிளக்கு பராமரிப்பு பணிக்கு தேவையான மின்சாதன பொருட்கள் வாங்குதல் | 7,00,000/— |

42. முதலீடுகள்

நகராட்சி முதலீட்டு கணக்கில் இருப்பு ஏதும் இல்லை.

43. தணிக்கை

தணிக்கை ஆண்டில் 1272 தணிக்கைத் தடைகள் இருந்தது. 311 தணிக்கைத் தடைகள் முடிவு செய்யப்பட்டது. அறிக்கை ஆண்டு முடிவில் 961 தணிக்கைத் தடைகள் நிலுவையாக உள்ளன.

44) கடன்

கடந்த ஆண்டுகளில் அரசிடமிருந்து கடன் ஏதும் பெறப்படவில்லை. ஏற்கனவே செலுத்தப்பட வேண்டிய கடன் தொகை மட்டும் வட்டி சேர்த்து செலுத்தப்பட்டு வரப்படுகிறது

45) தூய்மை இந்தியா திட்டம் (Swachh Bharath Mission)

மாண்புமிகு பாரதபிரதமர் அவர்களின் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் குளச்சல் நகராட்சியில் கழிப்பிடம் இல்லாத பொது மக்களுக்கு தனிநபர் கழிப்பிடம் ரூ.8000/— மானியத்துடன் கட்டிக் கொடுக்கப்பட்டது. குளச்சல் நகராட்சி பகுதியில் மொத்தம் 290 குடும்பங்களுக்கு தனிநபர் கழிப்பிடம் தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் கட்டப்பட்டு தற்போது பயன்பாட்டில் உள்ளது. மேலும் கழிப்பிட வசதியில்லாத வீட்டின் இடவசதி இல்லாத பொது மக்களுக்காக 2 சமுதாய கழிப்பிடங்கள் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு பயன்பாட்டில் உள்ளது.

**46)திடக்கழிவு மேலாண்மைப் பணிகள்**

மாண்புமிகு பாரத பிரதமர் அவர்களின் தூய்மை இந்தியா இயக்கத்துடன் இணைந்து சிறப்பு திடக்கழிவு மேலாண்மை திட்டம் : 2015–16–ன் கீழ், ரூ.178.00 இலட்சம் மதிப்பீட்டில் கீழ்க்காணும் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அதன் விவரம் பின்வருமாறு,

1. தடுப்புச் சுவர் மற்றும் சாலை அமைத்தல்
2. மேற்கூரையற்ற உரம் தயாரிக்கும் கூடம் அமைத்தல்
3. 1/3 மேற்கூரையுடன் கூடிய உரம் தயாரிக்கும் கூடம் அமைத்தல்
4. சுற்றுச் சுவர் அமைத்தல்
5. 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்தேக்கத்தொட்டி மற்றும் குழாய் பதித்தல் பணி
6. நிர்வாக அறை/ காவலர் அறை/ கழிவறை கட்டுதல்
7. பசுமை வேலி அமைத்தல்
8. Organic Pulverizer நிறுவுதல்.

குளச்சல் நகராட்சியில் தினசரி சேகரமாகும் சுமார் 7MT குப்பைகள் உப்பளம் உரக்கிடங்கில் கொட்டப்பட்டு வருகிறது. தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திட்டப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு நிறைவுறும் தருவாயில் உள்ளது. முழுவதும் திட்டப்பணிகள் நிறைவுற்றதும் தினசரி சேகரமாகும் குப்பைகள் முறையாக பிரிக்க நடவடிக்கை எடுக்கப்படும். இதற்காக திடக்கழிவு துணை விதிகள் 2016 நகர்மன்ற தீர்மானம் எண்.1624 நாள்: 28.02.2017–ல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு பத்திரிக்கையில் ஆட்சேபனை குறித்து விளம்பரப்படுத்தப்பட்டுள்ளது(பத்திரிக்கையின் விளம்பர நாள்: 21.03.2017) இது குறித்து எவ்வித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படவில்லை. ஆகவே திடக்கழிவு மேலாண்மை துணைவிதிகளை நடைமுறைப்படுத்த நகராட்சி நிர்வாக ஆணையரின் ஒப்புதலுக்காக கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.(ந.க.எண்.362/2017/எச்1 நாள்:21.06.2017) சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி பெற்றபின் அதனை அரசிதழில் விளம்பரம் செய்தும் உடன் நடைமுறைப்படுத்தப்படும்.

**47) திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சி (ODF Declaration)**

தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ், 290 தனிநபர் கழிப்பிடங்களும், 2 சமுதாய கழிப்பிடங்களும் கட்டப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. தற்போது குளச்சல் நகர்பகுதியில் பொது இடங்களில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லை என்று நகர்மன்றத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ( நகர்மன்றத் தீர்மானம் எண்.1567 நாள்:21.09.2016) அதன் அடிப்படையில் ஆட்சேபனை தெரிவிக்கும் பொருட்டு பத்திரிக்கையில் விளம்பரம் செய்யப்பட்டது. (பத்திரிக்கை விளம்பரம் நாள்.04.06.2017) இதில் எவ்வித ஆட்சேபனையும் எழுப்பப்படவில்லை. ஆகவே குளச்சல் நகராட்சி திறந்த வெளியில் மலம் கழிக்கும் பழக்கம் இல்லாத நகராட்சி என இறுதி தீர்மானம் நிறைவேற்றி சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப நடவடிக்கையில் உள்ளது.

<u>பொது குறிப்பு</u>

அறிக்கை ஆண்டில் இந்நகராட்சி நிர்வாகம் நல்லமுறையில் செயல்பட முழு ஒத்துழைப்பு நல்கிய அனைத்துப் பணியாளர்களுக்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்துக் கொள்ளப்பட்டது.

(ஒம்)தே.கிருஷ்ணமூர்த்தி
ஆணையர்
குளச்சல் நகராட்சி